DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி செல்வி.M. புஷ்பராணி, B.A., B.L., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் - திருமதி.முத்துமாரி **PW-7** வயது

த/க பெயர் தொழில்

கிராமம் தாலூக்கா

மாவட்டம்

முதல் விசாரணை:-

நான் தற்போது தர்மபுரி மாவட்டம், நவலை அரசு மேல்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.08.2012ம் தேதி நடந்த TNPSC குரூப்.2 தேர்விற்கு கம்பையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் அறைக்கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தேன். எனது முதன்மைக் கண்காணிப்பாளரின் அறிவுரைப்படி 9 மணிக்கு தேர்வு மையத்திற்கு சென்றேன். 9.15 மணிக்கு அறை ஒதுக்கீட்டு அறையில் லாட்சிஸ்டம்படி எனக்கு 32ம் எண் அறை ஒதுக்கப்பட்டது. ஒதுக்கிய பிறகு முதன்மைத் தேர்வுக் கண்காணிப்பாளரிடமிருந்து அறை எண்.32க்கு ஒதுக்கப்பட்ட வினாத்தாள் கட்டுகளைப் பெற்று 9.30 மணிக்கு அறைக்குள் சென்றேன். 9.50 மணிக்கு மணி அடித்தவுடன் வினாத்தாள் கட்டைப் பிரித்து 10.00 மணியளவில் தேர்வர்களுக்கு வினாத்தாளை விநியோகம் செய்தேன். அரை மணி நேரம் தாமதமாக வந்தாலும் தேர்வர்களை அனுமதிக்கலாம் என்ற அறிவுரை எனது முதன்மைத் தேர்வுக் கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்டதால், 10.10 மணிக்கு ஒரு தேர்வர்

தாமதமாக வந்தார். அவரிடம் தேர்வு நுழைவுச்சீட்டைப் பெற்று அந்த அறை என்பதால் அவருக்குரிய தேர்வு எண்ணுக்கு உரிய இடத்தில் அமர வைத்தேன். பிறகு அவரைத் தொடர்ந்து வருவாய்த்துறை அதிகாரி வந்து அந்த தேர்வரை கண்காணிக்கும்படி அறிவுரை கூறினார். சிறிது நேரம் கழித்து வருவாய் அதிகாரிகள், வருவாய் கோட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் அனைவரும் எனது அறைக்கு வந்தார்கள். மூன்று நபர்களில் ஒருவர் கையில் இருந்த ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட பேப்பர்களை வைத்து, தாமதமாக வந்த தேர்வரிடம் சென்று அவரை உற்று நோக்கினார்கள். அவர்கள் கையுடன் கொண்டு வந்திருந்த ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட பேப்பரை, தேர்வரின் வினாத்தாளுடன் ஒப்பீடு செய்து பார்த்தார்கள். பிறகு எனது தேர்வு நேரம் முடிவுற்றதால், நான் தேர்வர்களிடமிருந்து விடைத்தாள்களைப் பெற்றுக் கொண்டு, விடைத்தாள் ஒப்படைப்பு மையத்திற்கு சென்று எனது முதன்மைத் தேர்வுக் கண்காணிப்பாளரிடம் விடைத்தாள்களை ஒப்படைத்துவிட்டு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். தேர்வின்போது தாமதாமாக வந்த நபரைப் பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால், ஒருவேளை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும்(எதிரி ஆஜரில்லை, மனு ஏற்பு). அந்த தாமதமாக வந்த தேர்வரின் பெயர் சுரேஷ்குமார் ஆகும். இவ்வழக்கு சம்பந்தமான மற்ற விவரங்களை டிவி நியூஸ் பார்த்துதான் தெரிந்து கொண்டேன். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.</u>

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

போலீசார் என்னை விசாரிக்கும்போது, தேர்வு முடிந்து தேர்வர்கள் கலைந்து சென்றார்கள் என்றும், மேற்படி தேர்வர் சுரேஷ்குமாரை துணை வட்டாட்சியரும், அவருடன் வந்த மற்ற வருவாய்த்துறை அதிகாரிகளும் விசாரித்தார்கள் என்றும், அப்போது சுரேஷ்குமார் தான் தானிப்பாடியைச் சேர்ந்த ஆசிரியர் விவேகானந்தன் என்பவர் உதவியுடன் தானும், அருண் மற்றும் ரூபேஷ் ஆகியோருடன் 11.08.2012 ம் தேதி இரவு திருவண்ணாமலைக்கு சென்று ரங்கராஜன் என்பவர் மூலமாக குமார் (எ)

கார்த்திக் (எ) கார்த்திகேயன் என்பவரிடம் ரூபாய் மூன்று லட்சம் கொடுத்து தேர்வுக்கு முன்பே மேற்படி தேர்விற்கான வினாவிடைத்தாளை வாங்கி வந்ததாக சொன்னார் என்றும், மேலும் சுரேஷ்குமார், அவரிடம் கொடுத்தது போக மீதம் ரூ.50,000/-ம் தான் வைத்திருப்பதாக சொன்னதாகவும், மேலும் மேற்படி நபர்களின் போன் எண்கள் தன்னிடம் இருப்பதாக சொன்னார் என்றும், மேலும் தேர்வுக்குழுக் கண்காணிப்பு வருவாய்த்துறை அதிகாரிகள் மேற்படி தேர்வர் ஆஜர் செய்த பொருட்களுடன் தேர்வரை அன்று பாதுகாப்பு பணியிலிருந்த போலீசாருடன் கம்பையநல்லூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க என்னை இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரிக்கவில்லை என்றும், மேலும் தேர்வு விடைத்தாள்களை பொறுப்பு அலுவலரிடம் ஒப்படைத்துவிட்டு எனது வீட்டிற்கு சென்று விட்டேன் என்றும் உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

<u>1 ம் எதிரி தரப்பில் கு.வி இல்லை.</u>

<u>4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 26 முதல் 30 வரையிலான எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை:</u>

கம்பையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடந்த தேர்விற்கு ஒரே ஒரு நபர்தான் முதன்மைக் கண்காணிப்பாளர் ஆவார். அறை எண்.32 ன் தேர்வறைக் கண்காணிப்பாளர் நான்தான். அறை எண்.32 என்பது கம்பையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் தரைத்தளத்தில் இருந்தது. அறை எண்.32 ன் தேர்வு அறைக் கண்காணிப்பாளராக இருந்த எனக்கு என்னென்ன பணிகள் என்பதை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். தேர்வு அறைக்குள் தேர்வு தொடர்பாக எந்த தவறு நடந்தாலும் அதற்கு நான் தான் பொறுப்பு என்றால், சரிதான். தேர்வு அறையில் தேர்வு சம்பந்தமாக ஏதேனும் தவறு நடந்தாலும், பிரச்சனைகள் நடந்தாலும் நான் முதலில் முதன்மை தேர்வு கண்காணிப்பாளருக்குத்தான் சொல்ல வேண்டும். அறை எண்.32 ல் என்னுடைய அனுமதி இல்லாமல் தேர்வு அதிகாரிகளைத் தவிர மற்ற நபர்களை அனுமதிக்க முடியாது என்றால், சரிதான். அறை எண்.32 க்குள் நான் பணிக்கு செல்வதற்கு முன்பு யார் யாரைத் தேர்வு அறைக்குள் அனுமதிக்கலாம் என்று எங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என்றால், சரிதான். தேர்வு அறையில்

பணியாற்றுவதற்காக எனக்கம், மற்ற தேர்வு கண்காணிப்பாளர்களுக்கும் சிறப்பு அடையாள அட்டை எதுவும் கொடுக்கப்படவில்லை, TNPSC யால் வழங்கப்பட்ட பேட்ச் கொடுத்திருந்தார்கள். TNPSC யால் வழங்கப்பட்ட பேட்ச் தான் தேர்வு சம்பந்தமான அதிகாரிகளுக்கு சிறப்பு அடையாள அட்டை என்றால், சரிதான். TNPSC யால் வழங்கப்பட்ட சிறப்பு அடையாள அட்டை இல்லாமல் தேர்வு அறைக்குள் யாரையும் அனுமதிக்க அனுமதி இல்லை என்றால், சரிதான். கம்பையநல்லூர் காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றாலும், அந்த விசாரணையில் காலை 10.20 மணிக்கு காலதாமதாக வந்த தேர்வர் சுரேஷ்குமாருடன்(A-30) வருவாய் துணை வட்டாட்சியர், சில அலுவலர்கள் வந்தார்கள் என்றும், பின்பு அவர்கள் அந்த நபரை அவர் இருக்கையில் அமர வைத்துவிட்டு கீழே சென்றுவிட்டார்கள் என்றும் சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல, அவ்வாறு சொல்லியுள்ளீர்களா என்றால், இல்லை. வருவாய் அதிகாரிகள், வருவாய் கோட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் அனைவரும் எனது தேர்வு அறைக்கு வந்தபோது அவர்களின் சிறப்பு அடையாள அட்டையை காண்பித்தார்களா என்றால், இல்லை, அவர்கள் TNPSC யால் வழங்கப்பட்ட பேட்ச் அணிந்திருந்தார்கள். நான் அரசுப்பணியில் கடந்த 15 ஆண்டுகளாக இருந்து வருகிறேன். இவ்வழக்கில் நான் அரசு சாட்சியாக இருக்கிறேன் என்ற விவரம் எனக்குத் தெரியும். இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சிபிசிஐடி போலீசார் எனக்கு அழைப்பாணை கொடுத்தார்கள் என்றால், சரிதான். அழைப்பாணை பெற்றுக் கொண்டு, உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்துவிட்டு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், சரிதான். அழைப்பாணை பெற்றுக் கொள்வதற்கு முன்பாக என்னை போலீசார் போனிலோ, நேரிலோ தொடர்பு கொள்ளவில்லை. போலீசார் தரப்பில் என்னை விசாரிக்காத நிலையில் போலீசார் சம்மன் கொடுத்தபோது நான் சாட்சியாக சாட்சியம் அளிக்க விரும்பவில்லை என்று ஆட்சேபிக்கவில்லை. சிபிசிஐடி போலீசார் எனக்கு சம்மன் கொடுத்தபோது ஏற்கனவே நான் வாக்குமூலம் கொடுத்த விவரம் பற்றி என்னிடம் எதுவும் சொல்லவில்லை. கம்பையநல்லூர் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் 35 அறைகளில் தேர்வு நடைபெற்றது என்றால், சரிதான். அறை எண்.1 முதல் 16 வரையிலான அறைகளுக்கு மணி என்பவர் முதன்மைக் கண்காணிப்பாளர் என்றால், அதுபற்றி எனக்குத் தெரியாது. அறை எண்.17 முதல் 35 வரை சுப்பிரமணி என்பவர் முதன்மைக் கண்காணிப்பாளர் என்றால், சரிதான். சுப்பிரமணி என்பவரின் அறிவுறுத்தலைப்

பெற்றுத்தான் தேர்வு கண்காணிப்பு பணியை மேற்கொண்டேன் என்றால், சரிதான். தேர்வு மையத்தில், தேர்வுக் கட்டுப்பாட்டு அறை இருந்தது என்றால், சரிதான். வினாவிடைத்தாள் பெற்றுக் கொள்வதற்கும், விடைத்தாள் ஒப்படைப்பதற்கும் ஒரு தனி அறை ஒதுக்கப்பட்டு இருந்தது. சுப்பிரமணியம் என்பவரிடம் விடைத்தாள்களை ஒப்படைத்தேன். வினாத்தாள்கள் பெற்றுக் கொள்வதற்கும், விடைத்தாள்கள் ஒப்படைப்பதற்கும் நான் கையொப்பம் செய்துள்ளேன். அறை எண்.17 முதல் 35 வரையிலான அறைகளுக்கு முதன்மைக் கண்காணிப்பாளர் சுப்பிரமணி தேர்வின்போது வந்துவந்து சென்றார் என்றால், சரிதான். முதன்மைக் கண்காணிப்பாளர் சுப்பிரமணி தேர்வு அறைக்கு வந்து சென்றபோது, வருவாய் அதிகாரிகள் தேர்வரிடம் வினாத்தாளை வாங்கிப் பார்த்ததைப் பற்றி நான் சொன்னேனா என்றால், அவ்வாறு வருவாய் அதிகாரிகள் தேர்வரிடமிருந்து வினாத்தாளை வாங்கிப் பார்க்கவில்லை. வேறு எந்த தேர்வர்களிடமும் வருவாய்த்துறை அதிகாரிகள் கையில் கொண்டுவந்திருந்ததாக கூறப்படும் ஜெராக்ஸ் எடுக்கப்பட்ட பேப்பரைப் பொறுத்து வினாத்தாளை வாங்கிப் பார்க்கவில்லை. என்னிடம் மீதமிருந்த வினாத்தாள்களையும் அவர்கள் வாங்கிப் பார்க்கவில்லை. நான் மீண்டும் விடைத்தாள்களை முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தபோது எனது அறையில் தேர்வு முறைகேடு நடந்ததாக நான் சொல்லவில்லை. வருவாய்க் கோட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் அறை எண்.32 க்கு வந்து போனதையும், நான் முதன்மைக் கண்காணிப்பாளரிடம் விடைத்தாள்களை ஒப்படைத்தபோது சொல்லவில்லை, தேர்வு முடிந்தபிறகு அவர் என்னிடம் சொன்னார். நிறைய தேர்வு அதிகாரிகள் வந்து சென்றதால் அது குறித்த விவரங்களை நான் தெரிவிக்கவில்லை. தேர்வின்போது தேர்வறைக்குள் வரும் தேர்வர்கள் அவரவருடைய பொருட்களை வெளியில் தான் வைத்து விட்டு வரவேண்டும் என்றால், சரிதான். தேர்வு அதிகாரிகள் யார், யார் எத்தனை மணிக்கு வந்து சென்றார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால், சரிதான். வருவாய்க் கோட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர் எதற்காக ஜெராக்ஸ் பேப்பர்களைக் கொண்டு வந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. தேர்வின்போது எனது அறையில் தேர்வு சம்பந்தமாக முறைகேடுகள் நடந்தது பற்றி எனக்குத் தெரியாது, மறுநாள் டிவி பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்றால், சரிதான். TNPSC யால் வழங்கப்படும் வினாவிடைத்தாள்களைத் தவிர வேறு பேப்பர்களை எடுத்து வருவதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது என்றால், சரிதான். தேர்வாணையத்தின் விதிகள் அவ்வாறுதான்

உள்ளது என்றாலும், அதை நாங்கள் முறையாக பின்பற்றினோம் என்றாலும், சரிதான். தேர்வின்போது, தேர்வாணையத்தின் பேட்ஜோ, சிறப்பு அடையாள அட்டையோ இல்லாத எந்த நபரையும், எந்த பேப்பரையும் எடுத்து வருவதற்கு நான் அனுமதிக்கவில்லை என்றால், சரிதான். டிவியில் செய்தி வெளிவந்த பிறகோ அல்லது தேர்வு நடந்த அன்றோ மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் தரப்பிலிருந்து என்னை விசாரிக்கவில்லை. TNPSC தேர்வின் மாவட்ட தலைமை அதிகாரியான மாவட்ட ஆட்சியர் இது குறித்து என்னை விசாரிக்கவில்லை. எனது தேர்வு அறையில் தேர்வு குறித்து எந்த பிரச்சனையும் நடக்காததால் நான் முதன்மை மாவட்டக் கல்வி அலுவலருக்கோ, மாவட்ட ஆட்சியருக்கோ இதுகுறித்து தெரிவிக்கவில்லை என்றால், சரிதான். அன்றைய தினம் தேர்வு எழுத வந்த தேர்வர்கள் யாரையும் எனக்கு அடையாளம் தெரியாது என்றால், சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 26 முதல் 30 வரையிலான எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 10, 13, 14, 15, 16, 20, 21, 25 மற்றும் 17 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.